00324

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**அமைப்புசார் கல்வித் துறை**
**விஞ்ஞான/கல்வி/தாதியர் பட்டமாணி**

**மட்டம் - 03**
**இறுதிப் பரீட்சை - 2024**
**உங்கள் வேலைகளையும் நபர்களையும் முகாமை செய்தல் - MSU3208/ OSU3208**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

| திகதி: 06 டிசெம்பர் 2024 | நேரம்: மு.ப 9.30 - மு.ப 11.30 |
|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- **ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**
- **அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டுள்ளது**
- **உங்களது விடைகள் மையக்கருத்துடனும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.**

1. a) முகாமைத்துவத்தில் கட்டுப்படுத்தலை வரைவிலக்கணப்படுத்துக. (10 புள்ளிகள்)
   b) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக்கூடிய கட்டுப்படுத்தலின் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக. (15 புள்ளிகள்)

2. "தலைமைத்துவத்தின் பயன்பாட்டுத்திறனானது தலைவரின் பண்புகளில் மட்டுமல்லாமல், சக பணியாளர்களின் பண்புகள் மற்றும் பணிகளின் தன்மை ஆகியவற்றாலும் தீர்மானிக்கப்படுகிறது என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன".
   இக்கூற்று தொடர்பான உங்களது கருத்திக்களை தலைமைத்துவத்தின் நடத்தை அணுகுமுறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து விளக்குக. (25 புள்ளிகள்)

3. வணிக நிறுவனங்களில் கடந்த காலம் முதல் தற்போது வரை உருவாக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்பட்ட முகாமைத்துவ அணுகுமுறைகளை / கோட்பாடுகளை சுருக்கமாக விளக்குக. (25 புள்ளிகள்)

4. உங்களுக்குத் தெரிந்த ஒரு வணிக அமைப்பின் முதல் நிலை முகாமையாளராக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் திணைக்களத்தில் உள்ள ஊழியர்களை ஊக்குவிப்பதன் மூலம் உற்பத்தித்திறனை கணிசமாக அதிகரிப்பதற்கான சாத்தியத்தை நீங்கள் உணர்கிறீர்கள்.

   a) "ஊக்கப்படுத்தல்" எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (10 புள்ளிகள்)
   b) உங்கள் மேற்பார்வையில் உள்ள ஊழியர்களை ஊக்குவிக்க ஹெர்ஸ்பெர்க்கின் இரு காரணி கோட்பாட்டை நீங்கள் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக. (15 புள்ளிகள்)



147

5.

a) "ஒவ்வொரு அமைப்பும் சுற்றுச்சூழலில் ஏற்படும் சிக்கலான மாற்றங்களை எதிர்கொள்ள அதன் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்".
திட்டமிடல் என்றால் என்ன, நிறுவனங்களை நிர்வகிப்பதில் அதன் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குங்கள்.

(10 புள்ளிகள்)

b) உங்கள் பட்டப்படிப்பின் மட்டம் மூன்று தேர்வுகளை முடித்த பிறகு சிறிய அளவிலான உற்பத்தி/சேவை நிறுவனத்தைத் தொடங்க நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம்.
உங்கள் வணிகத்தைத் தொடங்கத் தேவையான செயல்பாடுகளை நீங்கள் எவ்வாறு திட்டமிடுவீர்கள் என்பதைப் பற்றி விவரிக்குக. (15 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

a) மொத்த தர முகாமைத்துவம் (TQM) (5 புள்ளிகள்)
b) மனித வளங்களை ஈர்த்தல் (5 புள்ளிகள்)
c) முகாமையாளரின் வகிபாகங்கள் (5 புள்ளிகள்)
d) வணிக நிறுவனங்களில் தொடர்பாடல் வலைப்பின்னல்கள் (5 புள்ளிகள்)
e) நிறுவனக் கட்டமைப்புக்கள் (5 புள்ளிகள்)

(25 புள்ளிகள்)

*-பதிப்புரிமைக்குரியது-*



199